**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr.P.C.**)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 134 of 2024

Depositions of PW -1 witness for ________ Prosecution / Defence / Court

Name : சங்கரபாண்டியன்

Father's Name : த/பெ. மாணிக்கம்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 02nd **day of June** 2025.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**முதல்விசாரணை**

1. நான் குறும்பபாளையத்தில் குடியிருந்து கொண்டு LMW கம்பெனியில் மெஷின் ஆபரேட்டராக வேலை செய்து வருகிறேன். சம்பவத்தில் இறந்து போன ஜீவானந்தம் எனது உறவினர் ஆவார். சம்பவத்தில் இறந்து போன ஜீவானந்தம் சம்பவம் நடப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பாக எங்களுடைய வீட்டிற்கு வந்தார். சம்பவ தினத்தன்று அவருடைய நண்பரை அழைத்து வந்து மதியம் சுமார் 01.00 மணியளவில் எங்கள் வீட்டில் இருவரும் சாப்பிட்டுவிட்டு சென்றார்கள். சுமார் 02.30 மணியளவில் அவருடைய நண்பர் பிரபு என்பவர் அவருடைய செல்போனிலிருந்து அழைத்து கருமத்தம்பட்டி அருகே விபத்து ஏற்பட்டு விட்டதாக கூறினார்.

2. உடனடியாக நான் சம்பவ இடம் சென்ற பொழுது ஜீவானந்தம் அவர்களை ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாக கூறினார்கள். ஜீவானந்தம் அவரது இருசக்கர வாகனத்தில் சேலம் நோக்கி சென்று கொண்டிருந்தபோது அதே திசையில் பின்னால் வந்த கார் மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டதாக தகவல் சொன்னார்கள்.எதிரி மீது நடவடிக்கை எடுக்கும்படி

காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் என்னால் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது தான். புகார் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சம்பவ தினத்தன்று மதியம் சம்பவத்தில் இறந்து போன ஜீவானந்தம் மற்றும் அவருடைய நண்பர் பிரபு இருவர் மட்டுமே வந்திருந்தார்கள். வேறு யாரும் வரவில்லை. பட்டியல் சாட்சி 2 பிரபு போலீசார் விசாரணையின் பொழுது பிரபு மற்றும் கோகுல் இருவரும் சம்பவத்தை நேரில் பார்த்ததாக சொல்லி உள்ளார்கள் என்றால், எங்கள் வீட்டில் இருந்து பிரபு மற்றும் ஜீவானந்தம் இருவர் மட்டுமே சென்றார்கள்.கோகுல் பின்னர் சந்தித்திருக்கலாம் அது குறித்து எனக்கு தெரியாது. சம்பவ விபத்தில் ஜீவானந்தம் ஒட்டி சென்ற வாகனம் ஜீவானந்தத்தின் சொந்தமான வாகனம் அல்ல. ஜீவானந்தத்தின் நண்பரின் வாகனம்.

2. ஜீவானந்தம் அவர்களுக்கு இருசக்கர வாகனத்தை ஓட்ட ஓட்டுனர் உரிமம் உண்டு. ஜீவானந்தம் ஓட்டிய வண்டி BMW இருசக்கர வாகனம் அதிவேகமாக செல்லக்கூடிய வாகனம். சம்பவத்தில் இறந்துபோன ஜீவானந்தம் இருசக்கர வாகனத்தை அதிவேகமாக ஓட்டிச் சென்று காரில் மோதி பாலத்திலிருந்து கீழே விழுந்து விட்டார் என்றால் சரியல்ல. புகார் நான் என் கைப்பட எழுதிக் கொடுத்தேன். சம்பவத்தில் இறந்துபோன ஜீவானந்தம் அதிவேகமாக ஓட்டிச் சென்று அவருக்கு தனக்குத்தானே விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றும் சம்பவத்தில் இறந்துபோன ஜீவானந்தம் எனது உறவினர் என்பதால் பொய்யான புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2025.06.02 20:10:15 +0530

**Signature of Witness** **நீதித்துறை நடுவர்**

**சூலூர்**